செய்தி வெளியீடு எண்: 864 நாள்: 28.06.2024

## செய்தி வெளியீடு

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து பாசனத்திற்காக ஏரியின் கிழக்கு மற்றும் மேற்கு பிரதான கால்வாய்களில் முதல் ஐந்து நாட்களுக்கு நாற்று விட தண்ணீர் விட்டும் பிறகு முறைப்பாசனம் மூலம் 3 நாட்கள் மதகை திறந்துவிட்டும், 4 நாட்கள் மதகை மூடி வைத்தும் சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு 6.00 மில்லியன் கனஅடி வீதம் 01.07.2024 முதல் 12.11.2024 முடிய 135 நாட்களுக்கு மொத்தம் 379.44 மில்லியன் கன அடி (தற்போது 233.62 மில்லியன் கனஅடி மீதம் 145.82 மில்லியன் கன அடி எதிர்வரும் பருவமழையை கருத்தில் கொண்டு) முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம் மேற்கு பிரதான கால்வாய் (பாரூர், அரசம்பட்டி, பெண்டர்அள்ளி) மற்றும் கிழக்கு பிரதான கால்வாய் (கீழ்குப்பம், கோட்டப்பட்டி, ஜிங்கல்கதிரம்பட்டி, தாதம்பட்டி) 2397.00 ஏக்கர் பாசன பரப்புகள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**
**நீர்வளத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu